# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண். 434/2016/பே**
**ஆணை நாள். 21–12 –2018**

திரு. அகமது ஜலீல்,
அதிராம்பட்டினம்
தஞ்சாவூர் மாவட்டம் -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
அதிராம்பட்டினம்– 614 401. -- எதிர்மனுதாரர்.

**ஆணை.**

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சி பொதுமக்கள் சார்பாக திரு,அகமது ஜலீல் என்பவரது 16.07.2013 நாளிட்ட (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.16221/2013/இ.2/நாள் 10.05.2016 நாளிட்ட கடிதம் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.434/2016 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சி, கீழ் நடுத்தெருவில் உள்ள செட்டியார் குளம் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல் பணிக்கு ரூ.50.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மேற்படி குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புளை அகற்றாமல் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி ஒதுக்கீட்டில் பல லட்சம் முறைகேடு நடைபெற்றுள்ளதாக தாங்கள் சந்தேகிகப்பதாகவும் தெரிவித்து விசாணைக் கோரி மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

25.05.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

09.01.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 27.02.2017ல் ஆஜரான அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் மேற்படி பேரூராட்சியில் 3 1/2 ஆண்டு காலம் பணி புரிந்ததாகவும், தற்போது மேற்படி பேரூராட்சியின் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும்,

மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு குறித்து நேரில் ஆய்வு செய்து அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

02.05.2017 நாளிட்ட அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் அதிராம்பட்டினம் பேரூராட்சியில் அமைந்துள்ள செட்டியாகுளம் ஊரணியினை 2012–13ம் ஆண்டு நபார்டு திட்டத்தில் ஊரணிகள் மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ் ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட பேரூராட்சி மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதாகவும், முன்னதாக அரசு விதிகளின்படி தமிழ்நாடு அரசு வருவாய் துறையினர் மூலமாக நில அளவைத் துறை அலுவலர்களை கொண்டு மேற்படி ஊரணி சர்வே செய்யப்பட்டதாகவும், அதன் பின்னர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்தக்காரர் மூலமாக மேம்பாடு பணிகள் மேற்கொள்ள பேரூராட்சி மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு குளம் மேம்பாட்டுப் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி பணிகளை பேரூராட்சி உதவிப் பொறியாளர், பணி ஆய்வர், ஆகியோரால் அளவீடுகள் செய்யப்பட்டு மண்டல உதவி செயற்பொறியாளரால் மேலாய்வு செய்து கண்காணிக்கப்பட்டதாகவும், மேற்படி குளம் மேம்பாடு செய்யும் பணிகள் நிறைவுற்று 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதாகவும், இப்பணிகளில் முறைகேடு ஏதும் இல்லை எனவும் தனது அறிக்கையில் அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.05.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரரை தனது முறையீடு குறித்து விள்க்கம் அளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2017 அன்று ஆஜராகத் தெரிவித்து அவரால் அனுப்பப்பட்ட முறையீட்டு மனுவில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி தற்போது உபயோகத்தில் இல்லை எனக் குறிப்பிட்டு மின்னஞ்சல் முறையீட்டு மனுதாரருக்கு செல்லவில்லை.

முறையீட்டு மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 27.07.2017 அன்று ஆஜராகத் தெரிவித்து 04.07.2017 நாளிட்ட அழைப்பாணையின் மேற்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு 06.07.2017 அன்று அனுப்பப்பட்ட நிலையில் மீண்டும் மேற்படி மின்னஞ்சல் முகவரி உபயோகத்தில் இல்லை என திரும்பப்பட்டதுடன் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட கடிதமும் முகவரி சரியானது அல்ல என அஞ்சல் துறை மூலம் திருப்பப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 27.06.2017 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் 06.07.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி அதிராம்பட்டினம் பேரூராட்சி புல எண். 261–39ல் அமைந்துள்ள செட்டியாகுளம், நபார்டு திட்டம் 2012–13ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி குளம் வருவாய்த்துறை பதிவேடுகளின்படி புல எண்.261–39 ன்படி மொத்த விஸ்தீர்ணம் 1.16.0. ஏர்ஸ் எனவும் மேற்படி குளத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய்த்துறை மூலம் சர்வே செய்து அகற்ற சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் சார்வு செய்து அகற்ற நடவடிக்கை மேற்கொண்ட நிலையில், மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குகள் தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 02.08.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 18.09.2017ல் ஆஜரான அதிராம்பட்டினம் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. எஸ்.எச்.அஸ்லாம், தனது வாக்குமூலத்தில் தான் மேற்படி பேரூராட்சியில் 2011 அக்டோபர் முதல் 2016 அக்டோபர் வரை பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்ததாகவும், செட்டியாகுளம்

முதல் 2016 அக்டோபர் வரை பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்ததாகவும், செட்டியாகுளம் என்பது ஒரு குளம் எனவும், இதில் கழிவு நீர் தேங்கி ஆகாய தாமரைகள் படர்ந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் இருந்ததாகவும், இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைப்படி நபார்டு திட்ட உதவியுடன் ரூ.50.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இந்த குளம் 5.00 ஏக்கர் பரப்பளவு கொண்டது எனவும் தெரிவித்துள்ளார். தனக்கு இந்த ஆக்கிரமிப்பு குறித்து எதுவும் தெரியாது எனவும், தனது குடும்பம் சிங்கப்பூரில் இருப்பதால் தான் சிங்கப்பூரில் நிரந்தரமாக வசிப்பதாகவும், மேற்படி பணி நடைபெறும் போது தான் அங்கு இருந்ததாகவும், தன்னிடம் ஆக்கிரமிப்பு உள்ளது என யாரும் தெரிவிக்கவில்லையெனவும், மாவட்ட ஆட்சியரின் அலுவலக ஆய்வின் போது கூட தெரிவிக்கவில்லை எனவும், மேற்படி குளம் அதிகமான பணிகளைக் கொண்டதால் ரூ.50.00 லட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள ஒப்பந்தக்காரர் யாரும் முன் வரவில்லையெனவும், திரு.சுல்தான் என்ற ஒப்பந்தக்காரர் இந்த பணியினை எடுத்து தனக்கு நஷ்டம் வரும் என்பதால் மதிப்பீட்டுத் தொகைக்கு மேல் 10 சதவீதம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என கேட்டதாகவும் அதற்கு தான் உடன்படவில்லை எனவும், பணி முடிந்தவுடன் தனக்கு நஷ்டம் வரும் எனவும் சொன்னதாகவும், இந்த வேலையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் இதனை ஈடு செய்யும் வகையில் வேறு ஒரு வேலையினைத் தருமாறு கோரியதாகவும், இதற்கென தனியாக எந்த வேலையும் தரவில்லையெனவும், அவருக்கு எப்பொழுதும் கிடைக்கும் பணிகள் போல் மற்ற வேலைகள் கிடைத்ததாகவும், திரு.சுல்தான் பல வேலைகளை செய்து வருவதாகவும், அந்த சமயத்தில் அதிக காலம் செயல் அலுவலராக திரு.முனியசாமி என்பவர் இருந்ததாகவும், அவர் தற்போது ஓய்வு பெற்று விட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்பு குறித்து தன்னிடம் யாரும் விசாரிக்கவில்லையெனவும், காதர் முகைதீன் கல்லூரி அதிராம்பட்டினத்தில் உள்ளதாகவும், அதில் முன்னாள் தாளார் திரு.சர்புதின் என்பவர் அந்த கமிட்டி உறுப்பினராக உள்ளதாகவும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்த ஒருவரும் நிர்வாக பொறுப்புக்கு வரக்கூடாது என்ற உள் நோக்கத்தோடு ஆக்கிரமிப்பு என புகார் செய்துள்ளதாகவும், மேற்படி இடத்தினை அளவு செய்தவர்கள் இது போன்று முன்னாள் தாளாளர் புகார் செய்தார் என பேசிக்கொண்டதாக கேள்விப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் முன்னாள் பேரூராட்சி மன்றத் தனது வாக்கு மூலத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 14.12.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி குளம் மேம்பாடு குறித்தான சில விவரங்களை சமர்ப்பிக்கத் தெரிவித்து அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 03.09.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2018 அன்று ஆஜரான அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தான் மேற்படி பேரூராட்சியில் 7/2017 முதல் செயல் அலுவலராக பணி புரிவதாகவும், மேற்படி பணி குறித்து தற்போது அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், மேற்படி குளம் பகுதியில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரத்தினை ஒரு வாரத்தில் சமர்ப்பிப்பதாகவும் அப்போது பணியில் இருந்த உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் விவரங்கள் குறித்தும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.10.2018 நாளிட்ட கடிதம் மூலம் தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, அதிராம்பட்டினம்

பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முன்னாள் பேரூராட்சிமன்றத் தலைவர் ஆகியோரின் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரருக்கு தனதுமுறையீடு குறித்து விளக்கம் அளிக்க போதிய வாய்ப்புகள் அளித்தும் அதனை பயன்படுத்திக் கொள்ளாமலும், முறையீட்டு மனுவில் சரியான முகவரியினை அளிக்காத நிலையில் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மின்னஞ்சல் கடிதங்கள் மேற்படி முகவரி நடைமுறையில் இல்லை என திரும்ப பெறப்பட்டுள்ளது.

அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் 06.07.2017 நாளிட்ட விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு மேற்படி குளத்தினை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தொடர்ந்த வழக்கு எண்.W.P(MD)No. 1323/2017 (WMP.(MD) No.1105/2017) குறித்து பரிசீலித்ததில் மேற்படி வழக்கில் பேரூராட்சி நிர்வாகத்தால் மேற்படி குளத்தினை ஆக்கிரமித்தவர்களின் வாரிசுகளுக்கு உரிய அறிவிப்புகள் வழங்காமல் ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதைத் தொடர்ந்து அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலவலரின் உத்திரவினை ரத்து செய்தும், மனுதாரரின் மேற்படி நீதிப்பேராணையினை ஏற்றும் மேற்படி ஆணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி ஆக்கிரமிப்பு குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்து நிலுயையில் உள்ளதால் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற-நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி இப்பொருட்பாடு குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் தற்போது விசாரணை தொடர இயலாது.

இருப்பினும் மேற்படி பொருள் குறித்து மாண்பமை நீதிமன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கத் தவறிய சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவர்கள் மீது உரிய துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு. அகமது ஜலீல்,
அதிராம்பட்டினம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர்மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை–108.